ராகங்களில்
இது புதியது
அபர்ணாலயாவின்
புதுவசந்தம்
இடம்: கைலாசபதி கலை அரங்கம்
காலம்: 20 - 08 - 1994
காலை 9மணி
சனிக்கிழமை மாலை 5மணி
(சி-8868)

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை ரூபா 5-00

தென்றலில்
தவழ்ந்து வரும்
அபர்ணாலயாவின்
புதுவசந்தம்
இடம்: கைலாசபதி கலை அரங்கம்
காலம்: 20 - 08 - 1994
காலை 9 மணி
சனிக்கிழமை மாலை 5மணி
(சி-8868)

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 31 செவ்வாய்க்கிழமை (16 08 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 261

இன்று வாக்களிப்பு முடிவுற்ற கையோடு அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வருகிறது

வாக்களிப்பில் இம்முறை அதிக அக்கறை

இத்தேர்தலில் பிரதான இரு அரசியல் அணிகளுக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவுவதாலும் இம்முறை செறிவில் 75 வீதம் முதல் 85 வீதம் வரையிலானோர் வாக்களிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

நாளையும் மறுதினமும் விடுமுறையாகப் பிரகடனம்

கொழும்பு, ஓக. 16

நாளையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் விசேட விடுமுறை நாட்களாக பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாக அரசு நேற்று அறிவித்தது.

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் வாக்களிக்கவும் பின்னர் தத்தமது இடங்களுக்குத் திரும்பிச் செல்லவும் வசதியாகவும்—

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காகவும்—

இவ்விரு நாட்களையும் விசேட விடுமுறை தினங்களாக பிரகடனம் செய்வது என ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டது.

அரச, தனியார், வங்கித்துறைகளைச் சேர்ந்த சகல ஸ்தாபனங்களுக்கும் இந்த விடுமுறை தினங்கள் பொருந்தும்.

(உ-ஐ)

காலை 7 மணி தொடக்கம் 9 மணி நேர வாக்களிப்பு

இலங்கையின் 10 ஆவது பொதுத் தேர்தல் வாக்களிப்பு இன்று இடம்பெறுகிறது.

9 ஆயிரத்து 533 வாக்களிப்பு நிலையங்களில் இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிப்பு நடைபெறும்.

ஒரு கோடி 9 லட்சத்து 45 ஆயிரத்து 241 வாக்காளர்கள் இம்முறை தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 2 லட்சத்து 17 ஆயிரத்து 999 பேர் தபால் மூலம் வாக்களித்துள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட 13 அரசியல் கட்சிகளையும் 26 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த ஆயிரத்து 440 வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இவர்களில் இருந்து 196 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

வாக்குகளை எண்ணும் பணி மாலை 5 மணிக்கு ஆரம்பம்

இன்றைய தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணும் வேலை இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

22 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 188 நிலையங்களில் வாக்குகளை எண்ணும் வேலைகள் இடம்பெறும்.

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் முதலில் எண்ணப்படும். அதனைத் தொடர்ந்து கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகள் வகைப்படுத்தப்பட்டு அவற்றை எண்ணும் பணி ஆரம்பமாகும்.

தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் 146 நிலையங்களில் எண்ணப்படும்.

தேர்தல் முடிவுகள்:

முதலில் தொகுதி வாரியாக பின் மாவட்ட ரீதியாக

கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் ஆகியன தொகுதி வாரியாகப் பெற்ற முடிவுகள் முதலிலும் —

மாவட்ட ரீதியாகப் பெற்ற வாக்குகளும் அதற்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அதைத் தொடர்ந்தும் —

ஒவ்வொரு மாவட்டத்திலும் வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை மூன்றாவது கட்டத்திலும் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது

தொகுதிவாரியான அறிவிப்புகள் இன்று நள்ளிரவுக்கு முன்னரே வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்ட ரீதியான முடிவுகள் நாளை அதிகாலை 4 மணி தொடக்கமும் -

வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை நாளை மதியம் முதலும்—

வெளியாகும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-ஐ-4)

முந்நூறு இராணுவத்தினர் கட்டுநாயக்காவில் காவல்

எதிரணியினர் திரளலாம் என அச்சம்

முந்நூறு இராணுவச் சிப்பாய்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'வெரித்தாஸ்' வானொலியின் சிங்களச் சேவை இதனை அறிவித்தது.

இன்று நடைபெறும் தேர்தலை ஒட்டி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த அரசியல்வாதிகள் தேர்தல் முடிவுகள் தமக்கு பாதகமாக வருவது தெரிந்ததும் நாட்டை விட்டுத் தப்பியோட முயற்சிப்பார்கள் என்றும்—

அதனால் தேர்தல் முடிந்தகையோடு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை மூடவேண்டும் என்றும் —

எதிரணியினர் தேர்தல் பிரசாரத்தின்போது கூறிவந்தது தெரிந்ததே.

இதனால் தேர்தல் முடிந்த கையோடு எதிரணி ஆதரவாளர்கள் விமான நிலையத்தை நோக்கி திரளக்கூடும் என அஞ்சப்படுகிறது. அதனைத் தடுக்கவே விமான நிலையத்தில் இராணுவத்தினர் காவலுக்கு நிறுத்தப்பட இருப்பதாகச் சொல்லப்படுகிறது

(உ-எ-6)

நள்ளிரவு முதல் ஊரடங்கு

கொழும்பு, ஓகஸ்ட் 16

ஒன்பதாவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் கடந்த மாதம் 15 ஆம் திகதி காலாவதியான அவசரகாலச் சட்டம், இன்று பத்தாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் வாக்களிப்பு முடிவுற்ற கையோடு மீண்டும் அமுலுக்கு வருகிறது.

அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்ததும் அச்சட்டத்தின் கீழ் இன்று நள்ளிரவு 12 மணி முதல் ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியால் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் செய்யப்படும் பிரகடனம் ஒன்றின் மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் பொதுசன பாதுகாப்புச் சட்டம் (அவசரகாலச் சட்டம்) பதினான்கு நாட்களுக்குள் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதன் மூலம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்படமுடியும். இவ்வாறு நாடாளுமன்றம் ஒவ்வொரு மாதமும் கூடி அச்சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கலாம்.

இவ்வாறு மாதாந்தம் நீடிக்கப்பட்டு வந்த அவசரகாலச் சட்டம் ஒன்பதாவது நாடாளு

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொ. ஐ. முவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு

படைகள் ஒத்துழைக்காவிடின் நாட்டில் குழப்பநிலை வரும்

சந்திரிகா எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 16

இன்று நடைபெறும் பொதுத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டும் பட்சத்தில், அவ்வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸாரும் ஆயுதப்படைகளும் ஒத்துழைப்பு வழங்காவிடின் நாட்டில் பெரும் குழப்ப நிலைமை ஏற்படலாம்.

—இவ்வாறு பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்ததாக 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது:

வைரத்தை வைரத்தால் வெட்ட வேண்டும் என்ற முதுரைக்கு ஏற்பவும் —

மனிதனுக்கு சேவை செய்வதே மனிதனின் தலையாய கடமை என்று காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க கூறிய அறிவுரைக்கு ஏற்பவும் —

புதிய சமுதாயத்தை எதிர்கொள்ளும்படி மக்களுக்கு சந்திரிகா குமாரணதுங்க வேண்டுகோள் விடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில் 2 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 16

நேற்று முன்தினம் காலை 5.50 மணியளவில் திருகோணமலை மாவட்டம் சளுத்ஒபா பகுதியில் வீதிச்சோதனை நடத்த வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் இருவர் பலியாகினர்.

புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இராணுவத்திடமிருந்து ரி - 56 ரக ரைபிள் — 2, அதற்குரிய மகஸின் — 5, நடுத்தர ரவைகள் — 114, ஜே. ஆர் ரகக் கைக்குண்டுகள் — 2, தலைக்கவசம் — 1, ஏ. கே ஹோல்சர்கள் — 1, தொப்பி — 1 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

வீடு பார்க்கச் சென்றவர் சடலமாகக் காணப்பட்டார்

அளவெட்டியில் சம்பவம்

அளவெட்டி செட்டிச் சோலைப் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்த்துவரச் சென்ற வயோதிபர் ஒருவர் மூன்று நாட்களின் பின் அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

அளவெட்டியில் இருந்து இடம்பெயர்ந்து கோண்டாவிலில் வசித்து வந்த — ஆறு பிள்ளைகளின் தந்தையான கார்த்திகேசு குமாரசாமி (வயது 60) என்பவரது சடலமே அது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனது வீட்டைப் பார்த்து வருவதற்காக கடந்த புதன் கிழமை அப்பகுதிக்குச் சென்ற இவர், வீடு திரும்பாததை அடுத்து அவரைத் தேடிச் சென்ற உறவினர்கள் அவரது சைக்கிளையும் உடமைகளையும் மட்டுமே கண்டுபிடித்து அவற்றை மீட்டு வந்தனர். அவருக்கு என்ன நடந்து என்பது இப்போது தெரியவரவில்லை.

பின்னர் நேற்று முன்தினம் அப்பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற மற்றொரு [illegible] வயோதிபர் அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் சடலமாக மிதப்பதைத் தாம் கண்டதாகத் தகவல் தெரிவித்துள்ளார்.

இவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு கிணற்றில் வீசப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ஐ-4-15)

வீட்டைப் பார்க்கவா

தெல்லிப்பழைக்குச் சென்ற இருவரைக் காணவில்லை

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒழுங்கையில் உள்ள வீட்டைப் பார்த்து வருவதற்காகச் சென்ற இருவர் இதுவரை வீடு திரும்பவில்லை.

அவர்கள் இருவரும் சென்ற இரு சைக்கிள்களும் தெல்லிப்பழை ஆலை [illegible] ஒழுங்கையில் [illegible] நிலையில் [illegible] பட்டு உறவினர்களால் மீட்டெடுக்கப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில், தெல்லிப்பழையில் இருந்து இடம்பெயர்ந்து கொக்குவிலில் வசிக்கும் சந்தையா கருணேந்திரன் (வயது 43) என்பவரும் அவருடன் துணைக்குச் [illegible] அவரது நண்பர் ஒருவருமே [illegible] (உ-15-4)

ஷெல் தாக்குதல்: மேலும் ஒருவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 16

அச்சுவேலிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்தவர்களில் மற்றொருவர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை தங்கவேலு (வயது 38) என்பவரே மரணமானவராவார்.

இவருடன் அன்றைய ஷெல் தாக்குதல் சம்பவத்தில் இறந்தோரின் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளது.

(உ-4-13-15)

இன்று மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஓக. 16

கோண்டாவிலில் அமைந்துள்ள அனுமதிக்கான விசாரணைச் செயலகம் இன்று மூடப்பட்டிருக்கும் என்பதை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் பொதுமக்களின் கவனத்துக்கு அறிவித்துள்ளனர். (ஐ)

முச்சந்தி முனி



ஊரடங்கு உத்தரவு மக்கள் நலனுக்கோ அல்லது தன்னைப் பாதுகாக்கவோ ....!

மக்கள் நலன் கருதியே ஊரடங்கு என்கிறார் டி. பி.

பொதுமக்கள் அனைவரினதும் நன்மை கருதியே இன்று நள்ளிரவு முதல் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிக்கத் தான் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நேற்று மாலை விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இந்த அறிக்கையில் நாட்டு மக்களுக்கு அவர் வாழ்த்தும் தெரிவித்திருக்கிறார்.

ஊரடங்குச் சட்டத்தின் மூலம் வாக்களிப்பின் பின்னர் இடம்பெறக்கூடிய வன்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் என ஜனாதிபதி கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

பாதுகாப்பு ஏற்பாடுகள் நாடு முழுவதிலும் தீவிரம்

இன்று நடைபெறும் தேர்தலை ஒட்டி நாடு முழுவதிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது

வரலாறு காணாத வகையில் பெரும் வன்செயல்கள், இரத்தம் தோய்ந்த வன்முறைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் தேர்தல் பிரசாரங்கள் முடிவடைந்துள்ளன என்றும் —

தேர்தல் வேளையும், அதைத் தொடர்ந்தும் எந்நேரமும் பெரும் வன்முறை வெடிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

தலைநகர் கொழும்பை பாதுகாக்க 2 படையணிகள்

இன்று வாக்களிப்புத் தினத்தன்றும் பின்னரும் கொழும்பு மாநகரில் ஏற்படக்கூடிய வன்முறைகளைத் தவிர்ப்பதற்காக இரண்டு படையணிகள் கடமையில் ஈடுபடுத்தப்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு மற்றும் சுற்று வட்டாரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாருடன் இராணுவத்தினரும் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர், பொலிஸ் ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது. உ-எ-6)

ஆட்சி மாற்றத்தையே மக்கள் விரும்புகின்றனர்

செய்தி ஏஜென்சிகள் கணிப்பு

ஆட்சி மாற்றம் வேண்டும் என்ற பரவலான அபிலாஷை நிலவுகின்றது. இந்தப் பின்னணியிலேயே இன்று தேர்தல்கள் நடைபெறுகின்றன.

—பி. பி. ஸி வெரித்தாஸ் உட்பட பல்வேறு செய்தி ஏஜென்ஸிகள் இவ்வாறு கருத்து வெளியிட்டன.

17 ஆண்டுகால ஐ. தே. க. ஆட்சிக்கு இத்தேர்தல் முடிவு கட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

''பைனான்ஷியல் ரைம்ஸ்'' உட்பட லண்டன் பத்திரிகைகள் சிலவும் இதே கருத்தை வெளியிட்டுள்ளன.

இதேவேளை ''த ஐலண்ட்'' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. அஜித் சமரநாயக்காவும் ''ராவய'' ஆசிரியர் விக்டர் ஐவனும் நேற்று இரவு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில்—

ஐ. தே. கட்சி வெல்வதற்கான சாத்தியம் எதுவும் இல்லை என்றும்—

17 வருட ஐ. தே. க. ஆட்சியில் மக்கள் களைத்துவிட்டனர் என்றும் — கூறினார்கள்.

தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி கட்டவிழ்த்து விடக்கூடிய வன்செயல்களை எதிர்கொள்ள மாவட்டங்களில் உள்ள பொ. ஐ முன்னணி ஆதரவாளர்கள் தயாராக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். [இ-உ-எ]

வெற்றி தங்களுக்கே என இரு தரப்பினரும் உறுதி

இன்று நடைபெறும் தேர்தலில் வெற்றி தமக்கே என்று இரு பிரதான அரசியல் அணிகளும் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றன.

ஐ. தே. கவின் வெற்றி நிச்சயம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று செய்தி ஏஜென்ஸிகளுக்கு அளித்த பேட்டியில் உறுதிபடக் கூறினார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்க தமது முன்னணியின் வெற்றி தீர்மானிக்கப்பட்ட ஒன்று எனத் தெரிவித்துள்ளார்.

இதனிடையில்—

தற்போதைய ஆட்சிக்குப் பதிலாக ஊழலற்ற ஜனநாயக ஆட்சி ஒன்றைத் தெரிவு செய்ய மக்கள் காட்டும் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றே வெளியிட்டார்.

(உ-எ-6)

மட்டக்களப்பில் விழுப்புண் அடைந்த

மேலும் ஐந்து வேங்கைகள் நேற்று முன்தினம் வீரச்சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 16

மட்டக்களப்பு மாவட்டத்தின் கட்டுமுறிவு இராணுவ முகாம் தகர்ப்புச் சம்பவத்தில் விழுப்புண் அடைந்திருந்த போராளிகள் ஐவர் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்தனர்.

★ இரண்டாம் செய்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சொனி T.V. 20 அங்குலர் மொடல் நம். KV 2030 சிறிய கட்டிலுக்குரிய ஆர்பிகோ குசன் மெத்தை என்பன விற்பனைக்குண்டு. சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சண்டிக்குளி, யாழ்ப்பாணம். (32384)

3 Sri Model போல் பிறிபெக்ட் காரும், ஒஸ்ரின் A 35 (2 Sri) ஸ்ரேசன் வகன் காரும் விற்பனைக்கு உண்டு. இல. 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (32374)

இக்கி, பாமாஸ், பன்டம், லைலன் பிறவுண் கோழிகளும், குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. சத்தியா ரவீந்திரன், குருக மதவடி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [32367]

நல்ல நிலையிலுள்ள வாட்டர் பம்ப் (Robin) விற்பனைக்குண்டு: இத்துடன் Imperial ரைப் ரேட்டரும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. எழிச்செல்வன் இல 31, நக்கா வீதி, யாழ்ப்பாணம். (32394)

புதிய மல்கலன் 200 கலன் நீர் கொள்ளக்கூடிய தண்ணீர்த் தொட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வேலை நாட்களில் V. தனபாலசிங்கம், (வேலப் பகுதி) இந்து விடுதி யாழ். மாநகரசபை, நல்லூர். (32404)

நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் இரண்டரை மாதங்கள் நிரம்பியவை விற்பனைக்கு உண்டு: தொடர்பு: கா. சண்முகநாதன் இல 258, கனகரத்தினம் வீதி, நாயன்மார்கட்டு (32389)

நாவல்கள்

செங்கை ஆழியானின் நூல்களை 20% சதவீதக் கழிவுடன் நல்லூரில் உற்சவகால பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (32401)

கோழிக்குஞ்சு விற்பனை

Prima Hyline வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32407)

உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சிவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் [சி-8678]

வெளிவந்துவிட்டது

மாருதம்

சஞ்சிகை: 07

[32417]

காவேரி சீயாக்காய்

ஆயுர்வேதமான இயற்கைப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது காவேரி சீயாக்காய்ப் பவுடர். இப்போது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்கவும். (32231)

ஜோதிட விஞ்ஞானம்

(மகரராசி) சந்திரிகாவின் ஜாதகத்தில் கடகலக்கினத்திற்கு 10ஆம் வீட்டில் வெள்ளி, செவ்வாயுடன் யோகபலமடைகின்றது. தற்போது நடக்கும் சனி தெசையில்/வெள்ளிபுத்தி சந்திரிகாவை பிரதமராக்கும். ஐப்பசி வியாழ மாற்றம் ஜனாதிபதியாக்கும். (சத்யா - கட்டுடை) [32408]

தேவை

கல்தேக்கு (கத்தாப்பு) விதை விலைக்கு வாங்குகிறோம். "மிக்கலைத்". (சி-8879)

நல்ல முறையில் அப்பளம் செய்யக்கூடிய வேலையாள் தேவை. உடன் கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 680, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32391)

மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்ப அட்டையுடன் வரவும். சகல மணிக்கூடு பற்றிகளும் உண்டு. சஜன் வாச்வேக்ஸ், 12 புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில். (7602)

காணவில்லை

நல்ல இன அல்சேஷன் ஆண் நாயைக் காணவில்லை! பிடித்து வைத்திருப்போர் அல்லது தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். சபா விற்பனை நிலையம், அச்சுவேலி. (32403)

பாலர் ஆசிரியராக

பயிற்சி விரைவில் — கடைசித் தவணை ஜி சீ ஈ. சாதாரண தரம் சனி, ஞாயிறு நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, 71, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (32386)

மணமகன் தேவை

கௌரவமான குடும்பப் பெற்றோர் யாழ். இந்துமத, செவ்வாய்க் குற்றமற்ற, சுவாதி நட்சத்திரம், வயது35, பொது நிறமுடைய நற்பண்புள்ள கலைப்பட்டதாரி ஆசிரியைக்கு இலங்கையில் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் நற்பண்புள்ள 40 வயதிற்கு உட்பட்ட மணமகனை எதிர்பார்க்கின்றனர். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல. 681, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32405)

பொது அறிவு

பொதுப் பரீட்சைகளுக்கு உரிய பொது அறிவு நூல் வெளிவந்துவிட்டது. ஆக்கம்: கலாநிதி. க. குணராசா, ஸ்ரீலங்கா புத்தகசாலை. பூபாலசிங்கம் புத்தகசாலை; (32402)

மாணவர்களுக்கு

கல்விசார் கட்டுரைகள் ஆக்கம்: சோ. சந்திரசேகரன், ஈழத் தமிழர் வரலாறு ஆக்கம்: கலாநிதி சி. க. சிற்றம்பலம். விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8851)

மானிப்பாய்
மருதடி விநாயகர் தேவஸ்தானம்
மானிப்பாய்

ஏல விற்பனை

எமது ஆலயத்தில் இருக்கும் பின்வரும் பொருள்கள் 21 - 08 - 1994 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு எம்மால் ஏலத்தில் விற்கப்படும்.

1. சிரட்டை குவியல்
2. மாட்டு எரு
3. வெற்று பெயின்ற் வாளிகள்.

மேற்படி பொருள்கள் ஏலத்தில் கேட்க விரும்புவோர் ஏலத்தின் முன்பதாக மீளளிப்புப் பணமாக ரூபா 1000/- ஆலயத்தில் வைப்பு பணமாக கட்ட வேண்டும் ஏலத்தில் பொருள்கள் கிடைக்காதவர்களுக்கு இப்பணம் உடனடியாக மீளளிப்பு செய்யப்படும் ஏலத்தில் பொருள்களை கொள்வோர் பணத்தை உடனடியாக கட்டி இரண்டு நாட்களுக்குள் பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும்.

★ பொருள்களை பார்வையிட விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய
தர்மகர்த்தாக்கள் சபை.

(32411)

★★ திருமண அழைப்பு ★★

அன்புடையீர்!

நிகழும் 24-08-1994 புதன்கிழமை (தமிழ் ஆண்டு ஆவணி 8ஆம் திகதி) காலை 10 மணிக்கும் 11-30மணிக்குமிடைப்பட்ட சுப வேளையில்—

மார்க்கண்டு செல்லம்மா
ஆகிய
எங்களின் கனிஷ்ட புதல்வன்
திருநிறைசெல்வன்
கேத்ஸ்வரன்
அவர்களுக்கும்

நற்குணம்
(புன்னாலைக் கட்டுவன் தெற்கு, முன்னாள் கல்பனாஸ் உரிமையாளர்)
முல்லைநாயகி
ஆகிய
எங்களின் கனிஷ்ட புதல்வி
அஜந்தா
அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஸ்ரீமயூரி அம்பன் கோயில் திருமண மண்டபத்தில் ஹவ்லக் றோட் கொழும்பு-6 (வெள்ளவத்தை தெசவு ஆலைக்கு அருகில்) நடைபெறும் என்பதையும், அத்தருணம் உற்றார், உறவினர் யாவரும் வருகைதந்து வாழ்த்துவதுடன், மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். இதை இரு வீட்டாரின் பொது அழைப்பாகக் கொள்க! தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்வழைப்பை வெளியிடுகின்றோம். தங்களின் அன்பளிப்பற்ற அன்பான வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்
திரு திருமதி
சி. மார்க்கண்டு செல்லம்மா
உரும்பராய், இளவாலை.

இங்ஙனம்
திரு. திருமதி
அ. நற்குணம் முல்லைநாயகி
உரும்பராய், அச்செழு.

(32410)

வாழ்த்துகின்றோம்

செல்வன் சூரியகுமார் கோகுலசங்கர்

இணுவில் மத்திய கல்லூரி மாணவன் சூ. கோகுலசங்கர் கோட்ட மட்டத்திலான ஆங்கில வாசிப்புப் போட்டியில் மருதனார்மடக் கோட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் திரு. ச. சூரியகுமார் (தொழில் நுட்ப அதிகாரி, சவூதி அரேபியா) திருமதி புஷ்பராணி சூரியகுமார் (முன்னாள் விநிதர், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, பாலர் கல்விக் கழக உறுப்பினர்) ஆகியோரின் மகனாவார். இவரை அப்பா, அம்மா, அண்ணா, தங்கை, மாமா (பொறியியலாளர் நீர்ப்பாசன வடிகாலமைப்பு இலாகா) மாமி, அப்பம்மா, இணுவில் மத்திய கல்லூரி அதிபர், ஆண்டு 4 ஆசிரியர்கள், திரு கல்வி நிலைய ஆசிரியர்கள், பாலர் கல்விக் கழகத்தினர் வாணி அருள் பெற வாழ்த்துகின்றனர்

(32418)

15 - 08 - 1994 ஆம் திகதி கடந்து விட்டதே என கவலை கொள்ளாதீர்கள்!

எம் அன்பார்ந்த மாணவர்களே!!
உங்களுக்காகவே ....
உங்கள் வசதி கருதி
22 - 08 - 1994 வரை
நீடிக்கப்பட்டுள்ளது!

"தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்"

வினா-விடைப் போட்டியில் பங்கு கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி மாணவர்களின் வசதி கருதி 22 — 08 — 1994 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

உட்கட்டுமானப் பகுதி
தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்
இல. 10, செம்பியன் லேன்,
கொக்குவில்.

தமிழீழத்தை தெரிந்து கொண்டு நீடித்த கால எல்லையினுள் நீங்களும் பிரவேசித்து தெரிந்ததை எழுதி அறிவுடன் கூடவே ஒரு பவுண் தங்கப் பதக்கத்தை உறுதி செய்து கொள்ளுங்கள்.

[சி-8883]

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 04 — 04 — 1944

உதிர்வு: 16 — 08 — 1993

செல்வி லோகராணி கந்தையா B. A.

(நல்லூர் - ப. நோ. கூ. சங்க
முன்னாள் பதில் பொது முகாமையாளரும்,
வங்கிச் சேவை முகாமையாளரும்)

நிலத்தியல் பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்குக்
குணத்தியல் பதாகுமறிவு

தாயே ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டகலா

உங்கள் பிரிவால் துயருறும்,
- கூட்டுறவாளர்கள்.

[32396]

8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 — 09 — 1933

மறைவு: 17 — 07 — 1986

திருமதி யோகம்மா சுப்பிரமணியம்

(முன்னாள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியை)

திதி: 16 — 08 — 1994

அம்மா! உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்;

கணவன், தாய், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

[illegible]
மருதடி,
சாவகச்சேரி.

[7599]

சனசமூக நிலையங்களில் பாரதி விழாவுக்கு ஏற்பாடு

தென்மராட்சி, ஓ. 16

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களில் செப்ரெம்பர் மூன்றாம் திகதி முதல் பத்தாம் திகதி வரை பாரதி விழா நடத்தப்படவுள்ளது.

செப்ரெம்பர் பதினோராம் திகதி யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் யாழ். மாவட்ட ரீதியிலான பாரதி விழா நடத்தப்படும்.

பாரதி விழாவில் பங்கு பற்ற விரும்பும் சனசமூக நிலையங்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விபரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்,கிளிநொச்சி மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா சகல சனசமூக நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார்.

(இ—161—117)

பிரதேச செயலகங்களுக்கு 188 பட்டதாரிகள் நியமனம்

யாழ்ப்பாணம், ஓ. 16

கொள்கை திட்டமிடல் அமைச்சினால் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் — யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்ற 188 பட்டதாரிகளுக்கு பிரதேச செயலகங்களில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட துணையாளர்களாக இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வழங்கியிருந்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் 5 பட்டதாரிகள் வீதம் நியமனம் பெற்றுள்ளனர்.

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலகங்களுக்கு மூவர் வீதம் நியமனம் பெற்றுள்ளனர். (ஓ-3)

ஆலயங்களில்

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-31)

நாளை

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவு கிளைச் சமாசத்தின் கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நன்கொடை நிதி நிறுத்தப்பட்டிருப்பது தொடர்பாக கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது. (ஐ-30)

* * *

நோயாளர் நலன்புரிச் சங்க உணவகம் ஒன்று பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நாளை (புதன்) முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

* * *

மக்கள் நலன் புரிக் கழகத் தொண்டர்களுக்கான அவசர முதலுதவிப் பயிற்சி நாளை (புதன்) பிற்பகல் 2 மணிக்கு நல்லூரில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சிமெந்து ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓ. 16

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வியாழன் பிற்பகல் 2 00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

கிறிஸ்தவ சேவா ஆச்சிரம 55 ஆம் ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஓ. 16

மருதனார் மடம் — சுன்னாகத்தில் உள்ள கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் 55 ஆம் ஆண்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை தொடக்கம் பிற்பகல் வரை நடைபெறும். (ஏ-161)

பதினான்கு கிராம அலுவலர் நியமனம்

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய கிராம அலுவலர்களாக 14 பேர் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார்கள். (ஏ-152)

வீதி திருத்தப்படுகிறது

யாழ். பொது வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதி முன்பாக அமைந்திருக்கும் ஆஸ்பத்திரி உள்ளக வீதியை திருத்தி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ—15)

நன்றி நவிலல்

கொழும்பு கப்பித்தாவத்தை பிள்ளையார் கோயிலில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற எமது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவின்போது நேரில் வருகைதந்தும் வாழ்த்துக்கள், அன்பளிப்புகள் அனுப்பியும் எம்மைக் கௌரவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அளவையூர் தவில் வித்துவான்
குமரகுரு தம்பதிகள்

[32416]

சமூகக்கல்வி செயலமர்வும் கருத்தரங்கும்

சமூகக்கல்வி செயலமர்வும், கருத்தரங்கும் யாழ். கோட்டத்தில் 6 - 11வரை சமூகக்கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான செயலமர்வு 16-08-1994 — 20-08-1994வரை 5நாட்களுக்கு காலை 8-30மணி தொடக்கம் மாலை 4-30மணிவரை யாழ் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவுப் பகுதியில் நடைபெறும். அனைத்து சமூகக்கல்வி ஆசிரியர்களையும் தவறாது பங்கு பற்றுமாறு யாழ் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

பிரதிக்கல்விப்பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.

(சி/8680)

நன்றி நவிலல்

கந்தையா நாகமுத்துப்பிள்ளை

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா அவர்களின் அன்புப் பாரியார் கந்தையா நாகமுத்துப்பிள்ளை அவர்கள் 15 - 08 - 94 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கல்வளை மயானத்தில் நடைபெற்றன. இதில் கலந்து ஆறுதல் கூறியும் பல வகையில் உதவிகள் புரிந்த பல நோ. கூ. ஊழியர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் நன்றி கூறி இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பூதப்பிள்ளை பரமேஸ்வரி
கந்தையா வைத்திலிங்கம்
(தெல்லிப்பழை ப. நோ. கூ. ச.
வர்த்தக முகாமையாளர்)
குடும்பத்தினர்

கல்வளை,
சண்டிலிப்பாய்.

(7603)

Nallur Branch Library

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

விடைகள் கிடைக்குமா?

ஸ்ரீலங்காவின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. ஸ்ரீலங்காவில் இதுவரை நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களைவிட இன்றைய தேர்தல் மிகவும் வித்தியாசமானது.

1989ஆம் ஆண்டும் ஸ்ரீலங்கா பொதுத்தேர்தல் வன்செயல்களின் மத்தியிலேயே நடைபெற்றது. மக்களில் பலர் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாத அச்ச உணர்வு, அவ்வருடம் பெப்ரவரி 15ஆம் திகதியன்று தெற்கு எங்கும் பரவியிருந்தது.

இன்றைய தேர்தலும் அமைதியாக நடக்கக்கூடிய சாத்தியம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. தேர்தல் பிரசாரகால வன்செயல்கள் மிக உச்சநிலையில் இருந்தன. அவற்றின் பிரதிபலிப்பு இன்றும் தெரியும் என்று நம்பலாம். அதாவது இம்முறையும் அச்சம் நிறைந்த சூழ்நிலையிலேயே சிங்கள மக்கள் வாக்களிக்கிறார்கள்.

இம்முறைத் தேர்தலில் மிகப் பரந்த அளவில் தில்லுமுல்லுகள், மோசடிகள், குளறுபடிகள் நடக்கும் என்று சாதாரண பிரஜையும் ஊகிக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது.

பதவியில் உள்ள ஐ. தே. க அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்துவிட வேண்டும் என்ற "வெறி"யுடன் செயற்படுவதனை கொழும்புத் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. தனது பதினேழு வருட ஆட்சி உடைந்து விடக்கூடாது என்பதற்காக சட்டங்களை மீறுவதுடன் மட்டும் நிற்காமல், மக்கள் உயிர்களைப் பறிக்கவும் ஐ. தே. கட்சி தயங்காது என்பதே நேற்றுவரை தெரிந்த படம்.

எதிரணியான, சுதந்திரக் கட்சியின் தலைமையில் உள்ள பொதுசன ஐக்கிய முன்னணி இம்முறை தான் பதவிக்கு வரவுள்ள வாய்ப்பை, சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்பதில் தீவிரமாக உள்ளது. அதனால் ஐ. தே. கட்சி செய்யக்கூடிய தில்லுமுல்லுகள், மோசடிகள், குளறுபடிகளை கண்டு பிடிக்கவும் தடுக்கவும் எதிர்த்திட்டங்கள் வகுத்துள்ளது.

இத்தகைய ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் தான் வாக்காளர்கள் தமது சனநாயகஉரிமையைப் பயன்படுத்தப் போகிறார்கள். நீதியான, சட்டபூர்வமான, சுதந்திரமான தேர்தல் நடக்குமா என்ற பெரிய வினாக்குறி இன்றைய தேர்தல் குறித்து உள்ளது.

அது ஒரு புறமிருக்க, சிங்கள மக்கள் தமக்குப் புதிய, வேறு தலைமை ஒன்றைத் தெரிவு செய்யப்போகிறார்களா அல்லது பதினேழு வருடம் தம்மை ஆண்டு, அனுபவித்த அணியினரையே மீண்டும் தெரிவு செய்யப்போகிறார்களா என்பதனை இன்றைய தேர்தல் தீர்மானிக்கும். சிங்கள மக்கள் புதுமை விரும்பிகளா இல்லையா என்பது வியாழக்கிழமை தெரிந்து விடும்.

இன்றைய தேர்தலில் எந்த அணி பதவியைக் கைப்பற்றிக் கொண்டாலும் தமிழர் பிரச்சினையை, அவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்குத் தீர்க்கப் போவதில்லை என்பது தெரிந்ததே.

எனினும் தமிழர்களுக்கு எதிரான பௌத்த நிலைப்பாட்டை அகற்றுவதற்கு சிங்கள மக்கள் மனம் விரும்பியிருக்கிறார்களா, தமிழர் பிரச்சினையை சமாதான வழியில் அரசியல் தீர்வின் ஊடாக முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறார்களா, இந்த நாட்டில் யுத்தம் நீங்கி அமைதி தோன்ற வேண்டும் என்று விரும்புகிறார்களா, தமிழர்களுக்குரிய உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்று மனங்கொள்கிறார்களா என்பன போன்ற பல கேள்விகளுக்கு ஆமா, இல்லையா என்ற பதில் இன்றைய வாக்களிப்பில் இருந்து பிறக்கும்.

நான்கு ஆண்டு கால யுத்தத்தின் பின்னரும், யுத்தகளத்தில் பல தோல்விகளின் பின்னரும், சிங்கள மக்கள் தமிழர்களுடைய பிரச்சினைகளையும், அவர்களது எதிர்பார்ப்புகளையும் அறிந்திருக்கிறார்களா, உணர்ந்திருக்கிறார்களா என்ற முக்கியமான வினாவுக்கும் இன்றைய தேர்தல் விடை தரும்.

மருத்துவபீட மாணவர்கள் வகுப்புகளுக்கு திரும்பினர்

யாழ்ப்பாணம், ஓக. 16

வட - இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். மருத்துவபீடத்தில் அனுமதிப்பது தொடர்பாக பல்கலைக்கழக மூதவை எடுத்த முடிவை கண்டித்து மருத்துவபீட மாணவர்கள் மேற்கொண்டு வந்த மறியல் போராட்டமும், வகுப்பு பகிஷ்கரிப்பும் நேற்று கைவிடப்பட்டன.

மருத்துவபீட மாணவர்கள் கடந்த புதன் முதல் பீடத்தின் கதவுகளை மூடி மறியல் செய்த காரணத்தால் மருத்துவபீட அலுவலகம் உட்பட சகல வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

மருத்துவபீட மாணவர்கள் தமது போராட்டத்தை நேற்று கைவிட்டதையடுத்து மருத்துவபீடம் மீண்டும் இயங்க ஆரம்பித்தது.

மருத்துவபீட மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் நடத்திய பேச்சுக்களையடுத்து மாணவர் தமது போராட்டத்தை பிற்போட முன்வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

ஆறு மாத காலத்தில் 175 சிசு மரணங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ். குடாநாட்டில் இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்திலும் 175 சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே காலப்பகுதியில் இடம் பெற்ற தாய் மரணங்கள் நான்கு

வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதி புள்ளி விவரங்கள் மூலம் இவை தெரிய வந்துள்ளன.

இவற்றுள் ஏப்ரல், மே, ஜூன் மாதங்கள் உள்ளிட்ட காலாண்டில் மட்டும் 93 சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

குறை மாதக் குழந்தைகளே இச்சிசு மரணங்களில் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டு. மாவட்டத்தில் போட்டியிடும்

கூட்டணி வேட்பாளருக்கு வாக்காளர் அட்டை இல்லை!

மட்டக்களப்பு, ஓக. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் ஒருவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வாக்காளர் அட்டை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவர் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் விசாரித்த சமயம் —

இடம் பெயர்ந்தோருக்கான வாக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளதால் கொழும்பில் வாக்களிக்க முடியும் என்று அவருக்கு பதில் அளிக்கப்பட்டது.

தாம் இடம் பெயர்ந்தோர் வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கவில்லை என்றும்—

தாம் மட்டக்களப்பு குருமண் வெளியில் குடும்பத்தினருடன் வாழ்வதாகவும்— அவர் தெரிவித்துள்ளார்.

வாக்களிக்கும் ஜனநாயக உரிமையை தாமும் குடும்பத்தினரும் இழந்துள்ளதாக அந்த வேட்பாளர் கூறியுள்ளார்.

இவ்விடயம் தேர்தல் ஆணையாளர் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (த-ர)

பொ.ஐ.முன்னணி வென்றால் இரு ஈழங்கள் உருவாகும்

ஆளும் கட்சி வேட்பாளர் உரை

கொழும்பு ஓக. 16

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தால் இந்நாட்டில் பிரபாகரன் தலைமையில் ஓர் ஈழமும் அஷ்ரப் தலைமையில் இன்னொரு ஈழமும் உருவாகும்.

ஐ. தே. க வேட்பாளர் டாக்டர் சரத் அமுனுகம கலகெதர கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார். (ஒ-எ)

தோல்வியுறும் கட்சியின் தலைவர்

ஜனாதிபதிப்பதவி வகிப்பது பொருத்தமற்ற செயல்

சு. க பொதுச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, ஓக 16

எதிர்வரும் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டி, நிறைவேற்று ஜனாதிபதியின் கீழ் செயற்பட வேண்டியுள்ளது தவிர்க்கப்பட முடியாத ஒரு விஷயமாகும்.

சு. க. பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்க எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தோல்வியுற்ற கட்சியின் தலைவர் நிறைவேற்று ஜனாதிபதியாகப் பணிபுரிவது பொருத்தமற்றதாகும் என்றும் அவர் கூறினார்.

பொதுமக்களின் தீர்ப்புக்கு ஜனாதிபதி தலைவணங்கக் கடமைப்பட்டவராவார். இதுவே மரபாகும். எனவே முன்னணி வெற்றியீட்டும் பட்சத்தில் முன்னணி நியமிக்கும் பிரதமருடன் பேசி அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுக்கக் கடமைப்பட்டுள்ளார். அவ்வாறாயின் மட்டுமே அமைதியாக அரசை நடத்த இயலும்.

தற்போது தேர்தலை நடத்த ஜனாதிபதியே தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவுகளை வழங்கி வருகிறார். இது கவலைக்குரியது.

எமது ஆட்சியில் தேர்தல் ஆணையாளருக்கு பூரண அதிகாரங்கள் வழங்கப்படும், தேர்தல் சட்டம் மீளாய்வு செய்யப்படும். —இவ்வாறு அவர் கூறினார். (ஒ-எ-6)

புலிகளின் குரல் வானொலியில்

16 – 08 – 1994

செவ்வாய் இரவு

- ★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாகி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் - தகவற் களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா — நிகழ்ச்சியில் "இரத்தச் சோகை வியாதியினால் ஏற்படுகின்ற ஆபத்துக்களும் காரணிகளும் அவற்றைத் தடுப்பதற்கான வழி முறைகளும்" பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் — "கார்குறதி"
- ★ 8-50 — களமும் கானமும் — "சமாதானத்திலிருந்து போர்க் களத்திற்கு"

17 – 08 – 1994

புதன் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

மக்களின் எழுச்சியை எந்த அரசாலும் தடுக்க முடியாது

பருத்தித்துறைக் கூட்டத்தில் அரசண்ணா

வடமராட்சி, ஓக. 16

மக்கள் எழுச்சியினால் எமது தேசத்துக்கு வளம் சேர்க்கப்பட்டு வருகிறது. மக்களின் எழுச்சியை எந்த அரசாலும் தடுத்து விட முடியாது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. அரசண்ணா தெரிவித்தார்.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நடைபெற்ற பலாலி தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த கரும்புலிகள், வீரவேங்கைகளின் வீரவணக்கக்கூட்டத்தில் அவர் பேசினார்.

வடமராட்சி வடக்கு கடற்புலிப் பொறுப்பாளர் திரு. அழகன் தலைமை வகித்தார்.

சிங்களதேசத்துடன் தமிழர்கள் இணைந்திருந்த போது இங்கு தமிழர்கள் இருக்கிறார்கள் என்று உலகுக்கோ, ஏன் அருகில் உள்ள இந்தியாவுக்கோ தெரியாமல் இருந்தது.

இன்று ஆயுதம் ஏந்தி நாம் போராடியதால் தான் தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்கும் எம்மை நன்றாகத் தெரிகிறது. சிங்களத்தின் அரசியல், இராணுவ பீடங்களைத் தவிர சிங்கள புத்திஜீவிகள் மத்தியில் எமக்கு மதிப்பு உண்டு.

உலகத்தால் நாம் மதிக்கப்படுவதற்கும், வரவேற்கப்படுவதற்கும் நாசமணிகளாக மாவீரர்கள் திகழ்கிறார்கள். சிங்கள அரசு எம்மை எள்ளி நகையாடும் போது நாம் வளர்ச்சி பெற்றுள்ளோம் என்பதை இம் மாவீரர்கள் தான் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

குடா நாட்டைப் பிடித்து சிங்கள மயமாக்கி அதற்குரிய பாதுகாப்பின் தளமாக சிங்களத் தலைவர்கள் பலாலி முகாமை நினைத்தார்கள். அவர்களது நினைப்பு இன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

கொள்கை மாறாத தன்மை உணர்வு, [illegible] போராட்டம் போன்ற எல்லாத் தன்மைகளையும் கொண்ட நாடுகள் கூட சீரான சரியான இராணுவக் கட்டமைப்பைக் கொண்டதாக இல்லை.

இவற்றுக்கெல்லாம் எமக்கு வழிகாட்டியாக இருக்கும் எமது தேசியத் தலைவர் மக்களை எல்லாம் தன் உள்ளத்தில் வைத்து மக்களின் மேன்மைக்காக, விடுதலைக்காக ஒவ்வொரு கணத்தையும் செயலிலேயே கழித்து வருகிறார். எமது தேசியத் தலைவரின் அயர உழைப்பினால் தான் தமிழ்மக்களின் பெருமை உலகில் பேசப்படுகிறது.

அன்று போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறினார். இன்று நாம் கூறுகிறோம். போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் எமது போராளிகள் [illegible] (எ-175)

நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 16

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தை ஒட்டி ஐந்தாம் நாளான இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு:

மாலை 6 மணிமுதல் 7மணிவரை பண்ணிசை — [illegible] மணி. 7-00—8-30 மணிவரை எம். ஸ்ரீரங்கநாதன் பாட்டு.

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில்:

மாலை 5-30 மணிக்கு சம்பூர்ணராமாயணம் தெய்வீக இசைப்பேருரை. பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா.

நல்லை ஆதீனத்தில்:

மாலை 2 மணிக்கு சமயப் பேருரை புராணப் படிப்பு. மாலை 6 மணிக்கு பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தியின் கந்தரனுபூதி பற்றிய தொடர் இசைப் பேருரை. (ஒ-111-80)

யாழ். மாவட்டத்தில்

51 தொழு நோயாளர்கள் இனங் காணப்பட்டனர்

இவ்வாண்டின் முதல் 7 மாதங்களில்

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ். குடா நாட்டில் இவ்வாண்டின் முதல் ஏழு மாதங்களில் புதிதாக 51 தொழு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் தொழு நோய்க்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. மு. குணரட்னம் இத் தகவலைத் தெரிவித்தார்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் 19 பேரும்,

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் 23 பேரும்,

ஜூலை மாதத்தில் 9 பேரும் தொழுநோயினால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

1993 ஆம் ஆண்டில் 52 தொழுநோயாளர்கள் புதிதாக இனங்காணப்பட்டிருந்தனர்.

மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து நெருக்கமாக வாழ்வதும் போஷாக்குக் குறைவுமே தொழுநோய் பரவுவதற்குரிய முக்கிய காரணங்கள் என்றும் அவர் கூறினார். (எ-4)

ஆசிரிய பயிற்சி கலாசாலை சம்பளம்

யாழ்ப்பாணம், ஓக. 16

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவருக்கான இம்மாதம் சம்பளம் இன்று 16ஆம் திகதி காலை 10-00மணி தொடக்கம் வழங்கப்படும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (இ)

வலி. மேற்குப் பகுதியில்

வரிகள் செலுத்தாமையால் வளர்ச்சிப் பணி பாதிப்பு

அராலி, ஓக. 16

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு வரியிறுப்பாளர்களினால் சுமார் 29 லட்சம் ரூபா வரிப்பணம் இன்னும் செலுத்தப்படாமல் நிலுவையாக இருக்கிறது என்றும் —

இதனால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இடம்பெற்ற பிரதேச சபையின் ஆலோசனைக் கூட்டத்தில் விசேட ஆணையாளர் திரு. கா. சந்திரராசா இத்தகவலை வெளியிட்டார்.

ஆதன வரிப்பணமாக சுமார் 15 லட்சம் ரூபாவும் மின்கட்டணமாக சுமார் 14 லட்சம் ரூபாவும் வரியிறுப்பாளர்களிடம் நிலுவையாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்நிலுவைப் பணம் அறவிடப்பட்டால் மட்டுமே இப்பிரதேசத்தில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

வரியிறுப்பாளர்களிடம் இருந்து இப்பணத்தை அறவிட்டு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள ஆலோசனைச் சபை உறுப்பினர்கள் உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இறுதியில் — வரி செலுத்த வேண்டிய அவசியத்தை விளக்குமுகமாக வரியிறுப்பாளர்கள் மத்தியில் கருத்தரங்குகளை நடத்த வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (எ-12)

காலபோக நெற்செய்கைக்கு மக்கள் வங்கி கடன் உதவி

இம்முறை கூடுதல் விவசாயிகளுக்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஓக 16

வடபகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மக்கள் வங்கி காலபோக நெற்செய்கைக்கு மூன்று கோடிரூபாவைக் கடனாக வழங்கதிட்டமிட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபாவையே மக்கள் வங்கி தனது கிளைகள் மூலமாக விவசாயிகளுக்குக் கடனாக வழங்கிவந்தது.

இம்முறை கடன் தொகையை அதிகரித்து கூடுதல் விவசாயிகளுக்கு வழங்க தலைமைப் பீடம் அனுமதி வழங்கியுள்ளதாகவும்—

வடபகுதியில் உள்ள சகல பிரதேச செயலர் பிரிவு விவசாயிகளுக்கு இந்தவசதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு. இ. அருளானந்தன் தெரிவித்தார்.

இதேவேளை — உப உணவுப் பயிர்ச் செய்கைக்கும் கூடுதல் கடன் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-3)

சித்த மருத்துவ அபிவிருத்தி சங்கம்

யாழ்ப்பாணம், ஓக 16

'யாழ் மாவட்ட சித்தமருத்துவ அபிவிருத்திச் சங்கம்' என்ற பெயரில் புதிய சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் சித்த மருத்துவ அபிவிருத்தி தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி சங்கம் நிறுவப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரை தலைவராகக் கொண்டு இயங்கும் இச் சங்கத்தில் வழிமுறையாக வந்த பிரதிநிதிகளும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இயங்கும் சித்த வைத்திய அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். (இ-4)

செஞ்சிலுவைச் சங்கம் வெள்ள நிவாரணம்

யாழ்ப்பாணம் ஓக 16

1993 டிசம்பர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டங்களில் சுமார் 500 குடும்பங்களுக்கு இத் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

உடுபுடவை மற்றும் வாளிகள் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகின்றன

சங்கானை, உடுவில், பருத்தித்துறை மருதங்கேணி, நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கே நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது (இ-17)

சித்தமருத்துவ கண்காட்சி

வலிகாமம் தெற்கு, ஓக 16

மானிப்பாயில் உள்ள தென்னை — பனைப்பொருள் அபிவிருத்தி நடுவப் பணியகத்தில் நடைபெற்ற சித்தமருத்துவ பொருள் விற்பனைக் கண்காட்சியை தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு எஸ் டொமினிக் திறந்து வைத்தார்.

மூன்று நாட்களாக நடைபெற்ற இக் கண்காட்சியில், தென்னை — பனை வள அபிவிருத்தி திணைக்களத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், மென்பான வகைகள், சித்த மருத்துவ குளிசைகள் போன்றவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (எ-152)

தென்னை நாற்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 16

தென்னைச் செய்கையை மேம்படுத்தும் பொருட்டு முல்லை மாவட்டத்தில் கருத் திட்டத்தில் இம் உற்பத்தி செய்யப்பட்ட தென்னை நாற்றுக்கள் தற்போது பல இடங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் உற்பத்தி செய்யப்பட்ட இந் நாற்றுக்களில் மாங்குளம் வட்டத்தில் 300 நாற்றுக்களும், நெடுங்கேணி வட்டத்தில் 700 நாற்றுக்களும் அண்மையில் கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இலவச தையல் பயிற்சி

வலிகாமம் மேற்கு ஓக. 16

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினால் சித்தன்கேணி மாதர் சங்க மண்டபத்தில் விரைவில் இலவச தையல்பயிற்சிவகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

எட்டாம் வகுப்பு சித்தியடைந்த 18வயதுக்கும் 35வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் இந்தமாதம் முடிவடைவதற்குள் விண்ணப்பிக்க வேண்டுமென வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா கோரி உள்ளார். (இ-175)

தாதியர் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஓக. 16

தென்பகுதியில் அரச ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் தாதிமார் சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கவிருந்த சுகயீன விடுமுறையில் செல்லும் தொழிற் சங்க நடவடிக்கை கைவிடப்பட்டது.

அவர்களது கோரிக்கைகள் பலவற்றை அரசு ஏற்றுக் கொள்ள முன்வந்ததை அடுத்தே போராட்டத்தை கைவிட தாதிமார் முடிவு செய்தனர். (ஐ-6)

நல்லூர் உற்சவகால [illegible]

நல்லருள்புரி நல்லூரானே!

ஆடும்பரி மீதிலேறி வந்து
அருள்வாய் ஆறுமுகனே
நாடும் அடியார் துயர் கேட்டு
நன்மைபல நல்குவயே
வாடுகின்றோம் வாழ்த்திட்ட
நடுவைவிட்டு ஏகி
நாடு ஒன்றெமக் [illegible]
நலமரு புரிவாய் நல்லூரானே!

—சங்கரத்தை சி. சபாநாதன்

முத்திரைச்சந்தி பகுதியில் தபால் பெட்டி

யாழ்ப்பாணம், ஓக. 16

நல்லூர் முத்திரைச்சந்திப் பகுதியில் புதிதாக தபால் பெட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதியிலுள்ள கடை ஒன்றில் இத்தபால் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நீண்ட நாட்களாக பழுதடைந்த நிலையில் இருந்த தபால் பெட்டிக்கு பதிலாகவே இத் தபால் பெட்டி அமைக்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (இ-4)

யாழ். தேர்தல் முடிவை ரத்துச் செய்க!

இல்லையேல் நீதிமன்றம் செல்வோம்

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிவிப்பு

கொழும்பு, ஓக 16

"யாழ்ப்பாணத் தேர்தலின் முடிவு எப்படி இருந்தாலும் முடிவை ரத்துச் செய்யும்படி அரசைக் கோரவுள்ளோம். அரசு அவ்வாறு செய்யாவிடின் நீதிமன்றத்துக்குச் செல்வோம்."

ஈ. பி. ஆர். எல். எவ். வின் தலைவர் திரு. சுரேஸ் பிறேமச்சந்திரன் கொழும்பில் பி. பி. ஸி. செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடக்கப்போவது தேர்தலே அல்ல. சுமார் ஆறு லட்சம் வாக்காளர்களைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் 13 ஆயிரத்து 500 வாக்காளர்கள் மட்டுமே வாக்களிக்கவுள்ளனர். இவர்கள் பத்து எம்.பிக்களைத் தெரிவு செய்வதென்றால் அது ஒரு கேலிக் கூத்து அல்லவா?

இந்நிலையைப் பகிரங்கப்படுத்தவே எமது கட்சி தேர்தலில் பங்குபற்றுவதாகவும் —

தேர்தலின் பின்னர் தமது கட்சியே நாடாளுமன்றத்தில் பலம் வாய்ந்த தமிழ்க்கட்சியாக விளங்கும் என்றும் அவர் கூறினார்.

தொங்கு நாடாளுமன்றம் என்ற நிலை ஏற்பட்டால் சில நிபந்தனைகளுடன்பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கே தாம் ஆதரவு வழங்கப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் மிகவும் பாதிக்கப்படப் போவது ஈ.பி. ஆர். எல். எவ் கட்சிதான் என பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும் கருதுகின்றனர் என பி. பி. ஸி தெரிவித்தது. (உ-ஐ-4)

ஹெலி நோட்டம்

வல்வெட்டித்துறை, ஓக 16

நேற்று நண்பகல் 12 மணியளவில் பலாலியிலிருந்து வந்த ஹெலி ஒன்று தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் பகுதியை பல தடவைகள் சுற்றி வட்டமிட்டுச் சென்றது. செல்வச்சந்நிதி மஹோற்சவத்தின் பூங்காவனத் திருவிழாவான நேற்று குறைந்த எண்ணிக்கையான பக்தர்களே ஆலயத்தில் காணப்பட்டனர். (ஐ-155)

யாழ். பல்கலைக்கழகத்துக்கு கூடுதல் டீசல் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ். பல்கலைக்கழகத்துக்கு கூடுதல் டீசல் வழங்க பாதுகாப்பு இணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்துக்கு இது வரை காலமும் எட்டு பரல் டீசல் வழங்கப்பட்டதாகவும் —

இனிமேல் 11 பரல் டீசல் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் பல்கலைக்கழக வேலைகள் ஓரளவு சீரடைய வாய்ப்பு உண்டு என்றும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் தாக்குதலினால் பீதி

மன்னார் நகரப் பகுதியில் வீடு வீடாகத் தேடுதல்!

யாழ்ப்பாணம், ஓக. 16

கடந்த வியாழக்கிழமை விடுதலைப்புலிகள் மன்னார் நகரப்பகுதியில் ஊடுருவி காவல் நிலையத்தைத் தாக்கி அழித்த சம்பவத்தை அடுத்து பொலிஸாரும் அதிரடிப்படையினரும் அங்கு தேடுதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நகரப் பகுதியில் வீடு வீடாகத் தேடுதல் நடத்தப்படுவதாகவும் —

கரிசல், தாராபுரம், பேசாலை பகுதிகளில் உள்ள சிறிய புதர்கள் கொண்ட காடுகளில் படையினர் தேடுதல் நடத்துவதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இரவு நேரங்களில் அப்பகுதிகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல் நடத்துவதாகவும் —

மன்னார் நகரின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தி வருவதாகவும் மேலும் தகவல்கள் தெரிவித்தன. (இ-3)

மரக்கறி எண்ணெய் கானுக்குள் பற்றறி

யாழ்ப்பாணம், ஓக. 16

மரக்கறி எண்ணெய்கான் ஒன்றுக்குள் பற்றறிகளை மறைத்து வடபகுதிக்கு கடத்திவர முயன்ற இருவர் தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் இராணுவத்தினரிடம் பிடிபட்டுவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரிய மரக்கறி எண்ணெய் கானினுள் பிளாஸ்ரிக் கான் ஒன்றை வைத்து அதனுள் பற்றறிகளை வைத்து அதன் மேல் கிறீஸ் பூசி மரக்கறி எண்ணெய் ஊற்றி இப்பற்றறிகள் கொண்டு வரப்பட்டிருந்தனவாம்.

தம்முடன் கொண்டு வந்த கான்களை தூக்க முடியாதவாறு இருவர் தூக்கிவருவதை அவதானித்த படையினர் கானை தூக்கிப் பார்த்தபோது அவை பாரமாக இருந்ததை அடுத்து கானை ஒதுக்குப் புறமான இடத்தில் வைத்து உடைத்துப் பார்த்தபோது அதனுள் பற்றறிகள் இருக்கக் கண்டு பற்றறிகளை கொண்டு வந்த இருவரும் பின்னர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

சனசமூக நிலையங்களுக்கு மீண்டும் நிதி உதவி வழங்குக!

மாகாணசபைக்கு வேண்டுகோள்

வலிகாமம், தெற்கு ஓக. 16

நீண்டகாலமாக வழங்கப்பட்டு வந்த சனசமூக நிலையங்களுக்கான அரச உதவி நன்கொடைப் பணத்தை மீளவும் வழங்குமாறு வலிகாமம் தென்மேற்கு பிரிவின் சனசமூக நிலையங்களின் சமாசம், வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சுச்செயலாளருக்குஇச்சமாசம் அனுப்பி வைத்துள்ள வேண்டுகோளில் —

உதவி நன்கொடைப்பணம் கிடைக்காமையால் சனசமூக நிலையங்கள் பல கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் —

உதவி நன்கொடைப்பணம் 1993 ஆம் ஆண்டுமுதல் நிறுத்தப்பட்டுள்ளமையால் சனசமூக நிலையங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற லிகிதர் - ஒறியன்ற் எஸ்டேட் கம்பளை)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னுத்துரை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன், மனோரஞ்சிதம் [டுபாய்], செல்வதரன் [பிரான்ஸ்], ஜெயரஞ்சினி, மாயாரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்தராணி, சச்சிதானந்தன் [டுபாய்], வசந்தாதேவி [பிரான்ஸ்], சண்முகதாசன் [கல்டி உரிமையாளர்] கணேசராசன் [சிவர்லைன்ஸ் உரிமையாளர்] ஆகியோரின் அன்பு மாமனாரும், மிதலா, சர்மிளா, யதூஷா, சுபிராஜ், நிரேஷ், சோபி, நிஷா, றேகோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை [16-8-94] பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோம்பலன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ ஸ்ரீதரன்.
[மகன்]
க. மாயாரஞ்சினி
(மகள்)

பொன்னையா லேன்,
[தபாற் கந்தோர் ஒழுங்கை]
ஆனைக்கோட்டை.

[32419]

பணம் அறவிட்ட போதிலும் சைக்கிள் கைக்கு வரவில்லை

பல்கலை. கல்விசாரா ஊழியர் கவலை

யாழ்ப்பாணம், ஓக 16

குறுகிய காலத்தில் சைக்கிள் கொள்வனவு செய்து தரப்படும் எனத் தெரிவித்து ஊழியர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ஐயாயிரம் ரூபா வீதம் அறவிடப்பட்டபோதிலும் —

இரண்டரை மாதமாகியும் சைக்கிள் பெற்றுத் தரப்படவுமில்லை; அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவுமில்லை என்று தெரிவித்து யாழ் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பல்கலைக்கழக ஊழியர்கள் சுமார் இருநூறு பேரிடம் இவ்வாறு பணம் அறவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே தமது பணத்தை உடனடியாக மீளளிக்கும்படியும் —

இல்லையேல் மேற்படி சைக்கிள் கொள்வனவுக்கு கொழும்பில் வர்த்தக நிறுவனம் எதற்கும் முற்பணம் செலுத்தியிருந்தால் அந்த ஆதாரத்தைச் சமர்ப்பிக்கும்படியும் —

கோரி யாழ் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

வேட்பாளர்கள் நால்வருக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஓக 16

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறில் ஐந்து வீடுகளை சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 24 பேரில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் 4 வேட்பாளர்களை மட்டும் பிணையில் செல்ல மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி அனுமதித்தார்.

இந்த வேட்பாளர்கள் மட்டக்களப்பில் சுயேச்சைக்குழு ஒன்றின் சார்பில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. (உ-3)

மாவுடன் "ருகுணு" வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஓக 16

திருகோணமலையில் இருந்து 950 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு "ருகுணு" கப்பல் நேற்று நண்பகல் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது. மா இறக்கும் வேலை உடன் ஆரம்பமானது. (உ-3-173)

இரு போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று ஹெலிக்கொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் இளமாறன் அல்லது கவாஸ்கர் என அழைக்கப்படும் பருத்தித்துறையைச் சேர்ந்த கனகராசா பிறேமச்சந்திரன், வீரவேங்கை கருநான் என அழைக்கப்படும் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த பச்சைமுத்து குமார் ஆகிய இரு போராளிகளுமே வீரச்சாவடைந்தனர். (உ-4)

மண்ணுக்கு உணவூட்ட கூட்டெருவே சிறந்தது

மண் ஏனைய விலங்கினங்களைப் போல் உயிருடன் வாழும் தன்மையுள்ளது இது கனிப்பொருட்கள், சேதனப் பொருள்கள், நீர், காற்று என்பவற்றின் சேர்க்கையால் ஆனது. இச் சேர்க்கையின் தன்மையினால் இது ஓர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை போன்றுள்ளது. அதன் வேலைகள் சரிவர நடக்க வேண்டும் எனில் அதற்கு உணவூட்டல் முக்கியமானதொன்றாகும். இதற்காக வளமாக்கிகளை நாம் பயன்படுத்துகின்றோம். இத் தொழிற்சாலையான மண்ணிற்கு இரு வகைப்பட்ட வளமாக்கிகள் பாவிக்கப்படலாம்.

ஒன்று, அசேதன வளமாக்கி இரண்டாவது, சேதன வளமாக்கி

வளமாக்கிகளின் பயன்பாடு

நாம் எமது விவசாய நடவடிக்கைகளில் அசேதன வளமாக்கிகளை மட்டுமே பயன்படுத்தி வருகின்றோம் எனினும் ஆரம்பத்தில் இருந்த சேதன வளமாக்கியானது உற்பத்தி விளைவுடன் வெளியேற்றப்படுவதனால், அம் மண்ணில் சேதன வளமாக்கியின் செறிப்பு குறைந்த வண்ணம் சென்று ஒரு நிலையில் சேதனப்பொருள் அற்ற மண்ணாக மாறுகின்றது. இந் நிலையில் அத் தொழிற்சாலையின் விளைவு குறைந்துவிடும் எனவே தொழிற்சாலை சரியான உற்பத்தியை மேற்கொள்ள வேண்டுமெனின் மேற் கூறப்பட்ட மண்ணின் நான்கு பகுதிகளும் இருந்தல் வேண்டும். எனவே இதில் இருந்து சேதனப் பொருள்களின் முக்கியத்துவம் வெளிவாக்கப்படுகின்றது எனவே மண் என்னும் தொழிற்சாலைக்கு உணவூட்டும் போது சேதன, அசேதன உணவு இரண்டினையும் ஊட்டுதல் இன்றியமையாததாகும்.

கூட்டெரு வாக்கம்

மேலும் நாம் சேதனப் பசளையாக கூட்டெருவும், மாடடெருவும் [illegible] கின்றோம். ஆனால் இவற்றில் பயிர் போசணைகள் அனைத்தும் இருந்தாலும் கூட எமது அவசரத்திற்கு ஏற்ப அவை உடனடிப் பசளை கொடுப்பதில்லை. இதன் காரணமாக 566 அந்தர் இரசாயனப் பசளை பாவிக்கும் இடத்தில் 10 தொன் கூட்டுப் பசளை இட்டால்தான் சமமான பயனை எதிர்பார்க்கலாம்

கூட்டெரு என்பது சேதனப் பசளையாக பாவிக்கப்படும் சேதனப் பொருள்கள் நுண்ணங்கித் தாக்கத்திற்கு உட்படுத்தி அவற்றில் உள்ள போசணைகளை தாவரங்கள் குறுகிய காலத்தில் நுகரக் கூடிய வகையில் அன்றினை மாற்றியமைத்தலே கூட்டெரு வாக்கம் எனப்படும்.

நிலத்திற்கு இடப்படும் சேதனப்பொருள் எத்தகையதாக இருப்பினும் இறுதியில் உண்டாகும் மக்கு பெரிதும் ஒரே தன்மையுடையதாகவே இருக்கும். கூட்டெரு வர்க்கத்தின் போது நாம் இடுகின்ற சேதனப்பொருள்கள் வேறுபட்ட அளவில் காபன்/நைதரசன் விகிதத்தை கொண்டு இருப்பினும் காபன் கூடவாகவும் நைதரசன் குறைவாகவும் இருக்கும் போது நுண்ணங்கி தமது தாக்கத்தின் மூலம் காபனை வெளித்து காபனீரொக்சைட்டு வாயுவாக வெளியேற்றுகின்றது. ஆனால் நைதரசன் நுண்ணங்கி தனது உணவாகக் கொள்கின்றது. இவை தாம் செத்து மடிவதன் மூலம் மீண்டும் அந்த நைதரசனை மண்ணில் சேர்க்கின்றன எனவே இடப்பட்ட சேதனப் பதார்த்தத்தில் பெரிதும் நைதரசன் இழப்பு ஏற்படுவது இல்லை. இம்மாற்றம் தொடர்ந்து நடக்கும் போது காபனின் அளவு குறைந்து கொண்டு வரும். இதனால் காபன் நைதரசன் விகிதம் ஆரம்பத்தில் இருந்ததை விட காபன் [illegible] 17 [illegible] நிலையை அடையும் வரை இடப்பட்ட சேதனப் பொருளில் இருந்து நைதரசன் பயன்படமாட்டாது. எனவே காபன் நைதரசன் விகிதம் கூடிய சேதனப் பொருள்கள் மரத்தூள் போன்றவற்றை இடும்போது அவை நீண்ட காலத்தின் பின்னரே தாவரங்களினால் பயன்படுத்தப்படுகின்றது.

அபிவிருத்தி

ஒரு கமத்தில் பல வகையான கழிவுப் பொருள்கள் ஏராளமாய் உண்டு அவற்றில் பெரும்பாலானவையில் நைதரசன் குறைவாகவே உள்ளன. ஆகவே அவற்றை சந்நிலையில்இடும் போது நிலத்தில் அவைபிரிகை அடைவதில் பங்கு பற்றும் நுண்ணுயிர்களின்தேவைக்குப் போதுமான நைதரசன்இருக்க மாட்டாது. ஆகவே நுண்ணுயிர்கள் மண்ணிலிருந்து நைதரசனை தமது தேவைக்குப் பயன்படுத்த அந்த நாட்டப்பட்ட பயிர் பெரிதும் பாதிக்கப்படும். எனவே இதனை கூட்டெரு தயாரித்தல் மூலம் தீர்க்க முடியும்.

கூட்டெருதயாரித்தல் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கலாம். அத்துடன் இங்கு நுண்ணங்கித் தாக்கம் கூடுவதனால் அங்கு உருவாகும் வெப்பத்தினால் களைவிதைகள் முற்றாக அழிக்கப்படுகின்றன. அத்துடன் இவை மென்மையாக்கப்பட்டு இலகுவில் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றப்படுகின்றன. இத்தகைய தன்மை கொண்ட கூட்டெரு தயாரித்தல் இன்றியமையாதொன்றாகும். இக்கழிவுகளை பயிர்செய்யாத நிலையில் உள்ள போதும் பாவித்தாலும் கூட அம்மண்ணின் ஈரலிப்புத் தன்மை இல்லையெனில் அது பிரிகைக் குட்படமாட்டாது எனவே இவையனைத்துக்கும் கூட்டெரு சிறந்த முறையாகும்.

தகவல்:
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

★

தமிழக மீனவர் விவகாரம் விரைவில் உடன்பாடு வரும்

முதல்வர் ஜெயலலிதா நம்பிக்கை

சென்னை, ஓக. 16

இலங்கைக் கடற்படையினரிடமிருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்கும் விடயத்தில் இருநாட்டு அரசுகளுக்கும் இடையே விரைவில் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களை பாதுகாக்க மாநில அரசு மேற்கொண்ட முயற்சியின் பயனாகவே இந்தச் சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் சுதந்திர தினமான நேற்று சென்னை கோட்டை கொத்தளத்தில் உரையாற்றியபோது செல்வி ஜெயலலிதா இந்த விபரங்களைத் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு பிரிவில்

இதுவரை 20 பேருக்கு வீடமைப்பு நன்கொடை

வலிகாமம் மேற்கு, ஓக 16

யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் வலிகாமம் மேற்கு பிரிவிலுள்ள 20 பேருக்கு இதுவரை வீடமைப்பு நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 20 பேருக்கு ஐக்கிய நாணய சங்கங்களின் ஊடாக உள்ளூர் மூலப் பொருள்கள் மூலம் புதிய வீடுகளை அமைக்கவும் வீடுகளை திருத்தவும் வீடமைப்பு நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

வறுமை நிவாரண உணவு முத்திரையுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கே இந்த வீடமைப்புநன்கொடை வழங்கப்படுகிறது. அதில் கூடுதலாக ஒருவருக்கு ஏழாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கட்டம் கட்டமாக வழங்கப்படும் இந்த வீடமைப்பு நன்கொடை மூலம் யாழ். மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வீடுகளை அமைத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-175)

குடிநீர் உவர் நீராவதை தடுப்பதில் ஈடுபடுங்கள்

உதவி ஆணையர் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் குடிநீர் உவர்நீராக மாறி வருவதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உள்ளூராட்சி சபைகள் மேற்கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா கடந்த வாரம் நடைபெற்ற உள்ளூராட்சி அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் உள்ளூராட்சித் திணைக்களங்களின் பொறுப்பதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சமாஜங்களின் சம்மேளனம், சனசமூக நிலைய அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடிநீர் உவர்நீராக மாறி வருவதற்குரிய பரிசோதனைகளை உள்ளூராட்சி சபைகள் மேற்கொள்ள வேண்டும். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் இவ்வருடம் 50 ஆயிரம் மரங்களை ஒவ்வொரு பிரதேச சபைக்கு உட்பட்ட இடங்களில் நடுகை செய்ய வேண்டும். சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் உதவி இதற்கு பெறப்படவேண்டும் என்றும் தெரிவித்தார் (எ-161)

சிப்பாய் தற்கொலை

யாழ்ப்பாணம், ஓக. 16

மட்டக்களப்பு சித்தாண்டி இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 8 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது. (ஐ-4

படைகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரினார்.

வாக்களிப்பு முடிந்த கையோடு முன்னணியின் தேர்தல் குழுக்கள் எல்லாம் அந்தந்தப் பகுதிகளில் சமாதானக் குழுக்களாக மாறிச் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

முன்னணி வெற்றி பெற்ற பின்னர் நாட்டில் இடம்பெறும் சிறிய அளவிலான குழப்பம் கூட முன்னணியின் ஆட்சிக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார் (உ-எ 6)

அன்று வாக்களிப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து கடந்த மாதம் 15 ஆம் திகதி காலாவதியானது தெரிந்ததே.

தேர்தலை அடுத்து எழக் கூடிய நிலைமைகளைச் சமாளிப்பதற்காக —

அவசரகாலச் சட்டத்தை அமுல்செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை, வாக்களிப்பு முடிந்தகையோடு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விடுப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டம் மீண்டும் நடைமுறைக்கு வரவிருப்பதை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்காவும் நேற்று உறுதி செய்தார்.

அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும் —

அச்சட்டத்தின் கீழ் இன்று நள்ளிரவு முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வரும்.

ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவது பற்றிய தகவலை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி விஜேதுங்காவின் பிரகடனம் மூலம் அமுலுக்கு வரும் அவசரகாலச் சட்டம் அடுத்த பதினான்கு நாட்களுக்குள் புதிய நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாவிட்டால் செயலிழந்து போகும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ-6)

வடமராட்சியில் பீரங்கித் தாக்கு

வடமராட்சி கடற்பகுதியில் இருந்து கடற்படையினர் நேற்றுக் காலை 6 மணியளவில் கரையோரப் பகுதிகள் மீது பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

வெற்றிலைக்கேணி பகுதியில் இருந்து காங்கேசன்துறைப் பகுதியை நோக்கிச் சென்ற கடற்படை படகுகளில் இருந்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (ஐ-155-15)

வாக்களிப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் வடக்கு கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச்சேர்ந்த பல லட்சம் வாக்காளர்கள் இம்முறை தேர்தலில் பங்குபற்ற மாட்டார்கள் என்பதால் முழு நாட்டிலும் வாக்களிப்போரின் வீதம் கணிசமாகக் குறைவு என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-6)

மேலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லெப். பாக்கியராஜ் (செல்லையா பத்மநாதன் - மட்டக்களப்பு)

★ இரண்டாம் லெப்டினன்ட் சத்தியசீலன் அல்லது சரண்ராஜ் (சிவப்பிரகாசம் சிவக்குணம்)

★ வீரவேங்கை வேம்ராஜ் (செல்லத்தம்பி கோணேசமூர்த்தி)

★ வீரவேங்கை ராம்ராஜ் (பொன்னுத்துரை கணேசமூர்த்தி)

★ வீரவேங்கை செல்வம் அல்லது அக்பேவி (பெரியதம்பி தவராசா — அம்பாறை) ஆகியோரே வீரச்சாவடைந்தனர். (ஐ-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெடினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 808/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.